# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை 22.11.2024 கதிர் 425







# சர்ச்சைக்குரிய தடுப்பூசிகள் கொள்வனவு விவகாரம் முன்னைய அமைச்சரவை பொறுப்புக் கூறத் தேவையில்லை!

## வாக்குமூலம் அளித்தபின் முன்னாள் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ கருத்து



சர்ச்சைக்குரிய தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமைக்கு அப்போதைய அமைச்சரவை பொறுப்புக் கூறவேணடும் என தாம் நம்பவில்லை, என முன்னாள் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்குவதற்கு இன்று வந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சமர்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் தொடர்பாக அப்போதைய அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 18 அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த 11ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் அறிவித்தது.

2➤

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பேரா.கோமிகா உடுகமசூரிய நியமனம்!



அமெரிக்க ஹூஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் எம்.டி.அன்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் இன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் பேராசிரியர் கோமிக உடுகமசூரியவிடம் வழங்கி வைக்கப்பட்டது.

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியாவார்.

பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய,

2➤

# தேங்காய்த் தட்டுப்பாட்டிற்கு தீர்வு காணப் புதிய திட்டம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய்த் தட்டுப்பாட்டிற்கு தீர்வு காணும் வகையில் குறுகிய காலத்திற்குள் தேங்காய்களைப் பெறக்கூடிய புதிய கலப்பின தென்னை இனங்களை அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய செயற்றிட்டத்தின் மூலம் மூன்று வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் அதிக பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்தார்.

# பாலியல் லஞ்சம் கோரினர் பலாலிப் பொலிஸார் கைது!

பெண்ணொருவரிடம் பாலியல் லஞ்சமும், 12 லட்சம் ஷரூபா பணமும் கோரிய பலாலிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பெண் தனது காதலனுடன் இருக்கும் ஒளிப்படத்தை வைத்து, பெண்ணின் வீட்டைக் கண்டுபிடித்த பொலிஸார், ஒளிப்படத்தைக் காட்டி மிரட்டியதுடன் அவரிடம் பாலியல் லஞ்சமும் பணமும் கோரியுள்ளனர்.

இதையடுத்து, பொலிஸாரின் மிரட்டல்கள் மற்றும் பாலியல் லஞ்சம் கோரியமைக்கான ஆதாரங்கள் என்பவற்றைத் திரட்டிய அந்தப் பெண், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய, மேலதிக நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், மேற்படி இரண்டு

2➤

# இன விடுதலைக்காகப் பாடுபட்ட நாங்கள் மக்கள் தேவைகளையும் பூர்த்தி செய்வோம்!

## புனர்வாழிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர்



இன விடுதலைக்காகப் போராடிய நாங்கள் ஜனநாயகத்தின் பாதையில் இறங்கியுள்ளோம். எனவே, மக்கள் பணிகளை முன்னெடுப்போம், என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இன்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், அடுத்து வரும் உள்ளூராட்சி மாகாண சபைத் தேர்தல்களில் வட,கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுவோம்.

அத்துடன், ஜனநாயகப் போராட்டத்தில் இறங்கிய நாங்கள் மக்கள் தேவைகளை உணர்ந்து அடுத்த முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வோம்.

2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கடமைகளைப் பொறுப்பேற்றார் பெருந்தோட்டப் பிரதியமைச்சர்



பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பத்தரமுல்லை செஸ்திரிபாயவிலுள்ள அமைச்சுக் காரியாலயத்தில் தனது பிரதியமைச்சுக் கடமைகளை இன்று உத்தியோகபூர்வமாகப் பொறுபேற்றுக் கொண்டார்.

இதன்போது பெருந்தோட்ட மக்கள் 200 வருட காலம் அனுபவித்து வந்த பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்தில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமெனவும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி தொழிலமைச்சர் மஹிந்த ஜெயசிங்க, அமைச்சின் அதிகாரிகள், ஊழியர்கள், பிரதியமைச்சரின் குடும்பத்தினர், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பேருந்துச் சக்கரத்தில் சிக்குண்டு வயோதிபப் பெண் மரணம்!

தனியார் பேருந்தின் சக்கரத்தில் சிக்குண்டு வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

62 வயதுடைய எல்லந்த களுகஹ பிட்டமாறுவ பகுதியை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மீகாகியூலவிலிருந்து பிட்டமாறுவை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் இருந்து ரோபேரி சிறி நாகாராம ஆலயத்திற்கு அருகில் குறித்த வயோதிபப் பெண் இறங்கியுள்ளார். பேருந்தை குறித்த நிறுத்தத்தில் நிறுத்தி விட்டு, மீண்டும் பேருந்து பயணிக்க முயற்சிக்கும்போதே குறித்த பெண் பேருந்தின் பின் சக்கரத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்ச்சைக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, தரமற்ற தடுப்பூசி மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட புலனாய்வு பிரிவு 1 இல் ஆஜராகுமாறு முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, பிரசன்ன ரணதுங்க மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஹரீன் பெர்னாண்டோவைத் தவிர ஏனைய சுழுவினர்நேற்று குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு வந்து வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர். அவர்களையடுத்து ஹரீன் பெர்னாண்டோ இன்று ஆஜராகினார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், "இதற்கு கடந்த அமைச்சரவை பொறுப்புக் கூற வேண்டும் என நான் நம்பவில்லை. ஏனென்றால், ஒரு நாளைக்கு குறைந்தது 60, 70 ஆவணங்கள் அமைச்சரவைக்கு வருகின்றன.

பொதுவாக அந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் அவற்றைத் தயாரித்து வழங்குவார்கள்.

அமைச்சர் அதனை அமைச்சரவையில் முன்வைப்பார். அவ்வாறு முன்வைக்கப்பட்ட பின்னர், நிதி அமைச்சகம் பரிந்துரைக்கும். இது சாதாரண நடைமுறையாகும்.

இருப்பினும், நீதிமன்றத்தை மதித்து எங்களுக்குத் தெரிந்ததைச் சொல்வோம் என்று எதிர்பார்க்கிறோம்" என்றார்.

## ஜனாதிபதியின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள வெய்ன் ஸ்டேட் பல்கலைக்கழகத்திலும் டெக்சாஸ் தென்மேற்கு மருத்துவ மையத்திலும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளார். புத்தாங்கங்களுக்கான பல காப்புரிமங்களைப் பெற்றுள்ள இவர், அமெரிக்க அரச பணியில் இருந்து விலகி, கௌரவ சேவையாக ஜனாதிபதியின் விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் பதவியில் இணைந்துள்ளமை விசேட அம்சமாகும்.

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் அதிகாரிகளையும் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சந்தேகநபர்களான பொலிஸ் அதிகாரிகளை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (01)

## இன விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இம்முறை வடகிழக்கில் ஏழு மாவட்டங்களில் சுயேட் சையாக போட்டியிட்டோம். ஆனால், துரதிஷ்டவசமாக ஆசனங்கள் கிடைக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பணிகளை முன்னெடுப்போம். வடக்கு, கிழக்கில் கட்சியின் நிருவாகப் பகுதியில் பல வெற்றிடங்களை நிரப்பியுள்ளோம். இதன் மூலம் முன்னால் போராளிகள் இந்த ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம், என்றார்.

# தொடர் மழையால் பாதிப்பு

*தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக யாழ்குடா நாட்டில் 610 குடும்பங்களைச் சேர்ந்த 2294 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 20 வீடுகள் சேதமடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.*

*இதில், தென்மராட்சிப் பிரதேசத்தில் 13 குடும்பங்களை சேர்ந்த 43 பேர் மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*தென்மராட்சிப் பிரதேசத்தின் நாவற்குழி மற்றும் கொடிகாமம் பிரதேச குடியிருப்புகளுள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது.*

*பாதிக்கப்பட்ட மக்கள் நாவற்குழி அன்னை சனசமூக நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

# ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு!

நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது இன்று முறையே 286.44 ரூபாவாகவும், 295.45 ரூபாவாகவும் உள்ளது.

நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 286.54 ரூபாவாகவும், 295.55 ஷரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி இன்று அதிகரித்துள்ளது.

எனினும், மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களுக்கு நிகராக ஷரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சி கண்டுள்ளது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

## ஒரு இலட்சம் ரூபாய் செலவிட்டு நாடாளுமன்றம் சென்ற பெண் சட்டத்தரணி



கொழும்பு, நவ. 22

பொது தேர்தலில் வெற்றி ஈட்டுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே செலவிட்டதாக வேட்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு தெரிவான சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தாம் இதற்கு முன்னர் செயல்பாட்டு அரசியலில் பங்கேற்றது கிடையாது எனவும் பிரதேச சபை ஒன்றை கூட தாம் பிரதிநிதித்துவம் செய்தது கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக தாம் நாடாளுமன்றம் செல்வதாகவும் இது மக்களுக்கு கிடைத்த பாரிய வெற்றி எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாம் எப்பொழுதும் எதிர்பார்த்ததே கிடையாது என குறிப்பிடடுள்ளார்.

இம்முறை பொது தேர்தலுக்காக தான் தனிப்பட்ட ரீதியில் சுமார் ஒரு லட்சம் ஷரூபாய் மட்டுமே செலவிட்டதாக தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கம் மக்களுக்கு சேவைகளை செய்ய தவறினால் கடந்த அரசாங்கங்களை விட வேகமாக மக்கள் தம்மை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறும் சிறப புரிமைகளில் சில வேலைகளில் அதிகார பூர்வ இல்லம் ஒன்று தமக்கு தேவைப்படும் எனவும் அதற்காக விசேடமாக கோரிக்கைகள் எதையும் தாம் விடுக்கவில்லை எனவும் சட்டத்தரணி துஷாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# உயர்தர பரீட்சாத்திகளுக்கு விடுக்கப்பட்ட விசேட அறிவித்தல்




கொழும்பு, நவ. 22

நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையின் போது ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும், பரீட்சையை இடையூறு இன்றி நடத்துவதற்காகவும் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் பரீட்சை திணைக்களமும் இணைந்து நடைமுறைப்படுத்தியுள்ளன.

வங்களா விரிகுடாவில் எதிர்வரும் வாரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.

எனவே பரீட்சை காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த சூழ்நிலைகளை தவிர்த்து மாணவர்கள் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் நல்ல சூழலை உருவாக்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை காலத்தில் பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்ப்பதற்காக அவசரகால பதில் ஒருங்கிணைப்பு பொறிமுறையை வலுப்படுத்தவும் இந்த கூட்டுத் திட்டம் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முப்படை, பொலிஸ் உள்ளிட்ட அனர்த்த முகாமைத்துவ செயல்முறை தொடர்பான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, பரீட்சை காலத்தில் ஏற்படக்கூடிய தடைகளை நிர்வகிக்க தேவையான வழிகாட்டுதல்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட நிலையத்தை அடைவதற்கான உதவிகளைப் பெறுவதற்கு சில தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


இதன்படி, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர இலக்கமான 117 அல்லது விசேட ஒருங்கிணைந்த அவசர செயற்பாட்டு அறை இலக்கங்களான 0113 668 020, 0113 668 100 அல்லது 0113 668 013, 0113 668 010 மற்றும் 076 3 117 117 ஆகிய இலக்கங்களுக்கு அழைக்க முடியும்.

பரீட்சை திணைக்களத்தின் அவசர இலக்கமான 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அது குறித்து அறிவிப்பதன் ஊடாக உடனடியாக நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், 2024ஆம் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு கடந்த 20ஆம் திகதி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எச்சரிக்கை!



கொழும்பு, நவ. 22

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் உரிய முறையில் பொருட்களை விற்பனை செய்கின்றனவா என்பதை கண்டறிய விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன்படி கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் காலாவதியான பொருட்களை சந்தையில் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையங்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால் 1977 என்ற இலக்கத்தின் ஊடாக நுகர்வோர் தங்களது முறைப்பாடுகளை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனிதனே, நீ யார், கடவுள் யார்

நாம் வாழும் இந்த உலகம், கேடுகள் அனைத்தையும் விளைவிக்கும் வெறும் கலிகாலத்தில் மட்டும் சிக்கிக்கொண்டு அவதிப்படவில்லை. அதைவிடவும் கொடுமையான நிலையான, இவ்வுலகை பரிபாலிக்கும் கடவுள் கூட இல்லாமல் அனாதையாக விடப்பட்ட பரிதாபமான உலகமாகவும் திகழ்கிறது.

எண்ணற்ற அறிஞர்கள், ஞானிகள், முனிகள், தவசீலர்கள் வாழ்ந்து சென்ற பூமி என்று சொல்லப்படும் இந்த உலகில் (குறிப்பாக இந்தியாவில்), இப்போதைய கால கட்டத்தில் எவ்வளவு நல்ல மனிதர்களை பார்க்கமுடிகிறது? நல்ல மனிதர் என்பது என் பார்வையில் அன்பு, இரக்கம், கருணை மற்றும் மனிதாபிமானம் கொண்டவர். இத்தகைய மனிதர்கள் இவ்வுலகில் மிக மிக மிக குறைவே. இந்த மிகக்குறைந்த நல்லவர்களில் நீங்களும் நானும் ஒன்றா என்றால், அதுகூடசந்தேகமே. நல்ல மனிதர்கள் என்பவர்கள், வெறும் கொள்கைகள் அடையாள அட்டை (பேட்ஜ்) தாங்கிய வெறும் வீரர்கள் இல்லை. நல்லதை நினைக்கவும், தன உயிரையும் தியாகம் செய்து பிறருக்கு நன்மை செய்யும் மனம் படைத்த அபூர்வமான மனம் படைத்த அப்பாவி மக்களைத்தான் நான் நல்லவர்கள் என்று குறிப்பிடுகிறேன்.

இந்த வகையில் நீங்களும் நானும் இப்படி பட்ட நல்லமனிதர்களில் ஒருவராக இருக்கமுடியும் என்பது மிகவும் கேள்விக்குரிய விஷயம்தான். நம்மில் பலர் நல்லதை சிந்திப்பவராக இருக்கலாம். ஆனால் எவ்வளவு பேர் பிறருக்கு நன்மை செய்கிறோம். ஒருவேளை நீங்கள் யாரேனும் நான் குறிப்பிடும் நல்ல மனிதர்களாக இருப்பின் அவர்களை நான் தலைகுனிந்து வணங்குகிறேன்.

விஞ்ஞான ரீதியாக, ஒன்றும் இல்லாத ஒன்றிலிருந்து திடீரென்று (வெடித்து) தோன்றி, லட்சலட்ச வருடங்கள் மனித சுவடே இல்லாத உலகமாகத்தானே இது இருந்திருக்கிறது இந்த உலகமும் பிரபஞ்சமும். அப்படி என்றால், மனித உயிர் எப்படி உருவாயிற்று? யார் இந்த மனித உயிரை முதன் முதலில் படைத்தது? மனிதன் தானாகவே உருவான சுயம்பு என்றால் அதையும் நம்பமுடியவில்லை. இரண்டு உடல்கள், அதுவும் ஒரு ஆண் ஒரு பெண் இல்லாவிடில், எப்படி இன்னொரு உயிர் உருவாக முடியும்?

உருவம் இல்லாத ஒரு சக்தி, இருவர் இணைந்தால்தான் உருவாகும் உயிருள்ள உருவத்தை எப்படி படைத்தது? அப்படி என்றால் ஒன்றுமே இல்லை என்ற அந்த முதன்மையான சக்தி, ஒன்றல்லாது இரண்டா? அப்படி என்றால், ஒன்றும் இல்லாத அந்த இரண்டில் ஒன்று ஆணா, இன்னொன்று பெண்ணா? இது சத்தியமாக மாயமே, மர்மமே, தலையை பிய்த்துக்கொள்ளும் தலைபோகும் விஷயமே. மனிதனின் ஞானமும் விஞ்ஞானமும் இந்த கேள்விக்கு இதுவரை தக்க பதிலை அளிக்கமுடியவில்லை என்பதுதான் நம்மில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்தாக இருக்கும் என்று நம்புகிறேன்.

சரி, இது ஒரு பக்கம் இருக்கட்டும். பிரபஞ்சம் ஏன் படைக்கப்பட்டது? ஆகாயம், நட்சத்திர மண்டலம், சூரியன் சந்திரன் இவை எல்லாம் ஏன் உருவாக்கப்பட்டது? இவை எல்லாம் உருவாக மூல காரணமாயிருக்கும்,

எவராலும் உணரவே முடியாத அந்த சக்தி, ஏன் நம் எவருடைய கண்களுக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டிருக்கிறது? காற்றுகூடத்தான் கண்ணுக்கு தெரியாமல் இருக்கிறது. ஆனால் நம்மால் உணரமுடிகிறதே. நம் ஆறறிவுள்ள மனதுகூட கண்ணுக்குத்தெரியாமல் நம்மிலிருந்துகொண்டே நம்மை ஆட்டிவைக்கிறதே. அது ஏன், எவ்வாறு உருவானது? காற்றை நாம் உணர்வதைப்போல கடவுளையும் (உருவற்ற) நம்மில் பலரால் உணரமுடிகிறது என்று இருந்திருந்தாலும், நாம் கடவுளை பற்றி இந்த அளவுக்கு குழப்பிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் வந்திருக்காது. விஞ்ஞானம், கடவுள் என்ற ஒன்று வெறும் கற்பனையே, பௌதீக ரீதியாக கடவுள் என்ற ஒன்று எதுவும் இல்லை என்று சொல்வதை நாம் உண்மையிலேயே மறுக்கமுடியுமா? இந்த பிரபஞ்சமும் உலகமும் மனிதனும் மற்றும் இதர உயிர்களும் ஏதோ ஒரு மாபெரும் சக்தியின் மூலம்தான் உருவாகியிருக்கமுடியும் என்பதை விஞ்ஞானமும் மறுக்கமுடியாது. எனவேதான், சில விஞ்ஞானிகள் அனைத்தும் உருவாக முதற்காரணமாக இருக்கும், இருந்து இயங்கிவரும் அந்த பேராற்றல் கொண்ட சக்தியை, கடவுள் அணுக்கள் (புழனᾹயசவலைஉடநள) என்று குறிப்பிடுகிறார்கள். இப்படி கருதுவதின் மூலம் விஞ்ஞானிகள், கடவுள் எனும் சக்தி இருக்கிறது என்பதை ஆய்வுக்கூடங்களின் சோதனைகள் மூலம் நிஷரூபிக்கமுடியாவிட்டாலும், நிஷரூபிக்கமுடியாத அந்த இயலாமையால், மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஒருவேளை கடவுள் என்று எதுவும் இல்லை என்று எல்லோருமே நம்பினால், பின்னர் இந்த உலகம் எப்படி இருந்திருக்கும், இயங்கும் என்பதைத்தான் நினைத்துக்கூட பார்க்கமுடியுமா? அவரவர் தனக்கு தோன்றுவதை செய்து கொண்டிருப்பார்கள், செய்து கொண்டும் கொன்றுகொண்டும் இருப்பார்கள். ஒருவர் பலரது மனதை வென்றிருப்பார் அப்படி வென்றவர்களை தன்வசம் கொண்டிருப்பார் அப்படியானால், பலர் ஒருவரின் இதயத்தில் குடிகொண்டிருப்பார்கள். ஒரு மணமகன் பல மணமகள்கள், ஒரு மணமகள் பல மணமகன்கள் என்றெல்லாம் நினைத்துப்பார்க்கமுடியாத சூழ்நிலைகள் உருவாகியிருக்கும்.

கடவுள் நம்பிக்கை இல்லாத உலகில், வல்லவர்கள் நல்லவர்களை விட்டுவைத்திருப்பார்களா? ஒழுக்கம், தருமம், நீதி, நேர்மை, நியாயம், உண்மை போன்ற பதங்களும் வார்த்தைகளும் உலகின் அகராதிகளில் இருந்திருக்குமா? ஒரு வேலை இப்பதங்கள் உலக அகராதியில் இல்லாதிருந்தால், உலகம் எப்போதோ சர்வநாசம் ஆகியிருக்கக்கூடும் அல்லவா?

அந்த வகையில், கடவுள் என்ற சக்தி ஒன்று ஏதோ, நம் அகக்கண்களுக்கு

தெரியாவிடினும், கண்டிப்பாக இருக்கிறது, என்கிற எண்ணத்தின் விதையை விதைத்தவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும். அப்படி உருவாக்கப்பட்ட கடவுள் என்பது, வெறும் கற்பனை, மூடநம்பிக்கை, பொய்புரட்டு என்று கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை கேலிசெய்து சித்தரிக்கும் பல மனிதர்கள் அன்றும் இன்றும், என்றும் எங்கும் இருக்கிறார்கள். இவர்களின் கூற்றுகளை அனைத்தையுமே 'நாத்திகர்கள், திமிர் பிடித்தவர்கள்' என்று கூறி ஓரம் கட்ட இயலுமா?

விதி, பூர்வஜென்ம கர்மவினைகள் என்னும்போது, இவ்வுலகில் முதன் முதலில் பிறந்த மனிதனின் பூர்வ ஜென்ம கர்ம வினைகள் தான் என்ன?

ஒருவினையும் இல்லாதிருப்பின், பின் ஏன் முதல் மனிதன் பிறக்கவேண்டும்?

அப்படி பிறந்த முதல் இரண்டு மனிதர்கள் என்ன செய்திருப்பார்கள்? அவர்களில் ஒருவர் ஆணாகவும் இன்னொருவர் பெண்ணாகவும் இருந்திருப்பின், குழந்தைகள் பிறக்க வழிசெய்வதைத் தவிர வேறு எதுவும் செய்திருக்க வாய்ப்பில்லை தானே? இயற்கையின் விதிப்படி, இந்த முதல் ஜோடி, அந்த காரியத்தில் ஈடுபட்டது, கண்டிப்பாக குற்றம் என கருதப்படாத செயலாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் முதல் மனித ஜோடி காலத்தில் பகவத் கீதை இல்லை, பைபிள் இல்லை அல்லது குரான் இல்லை. திருக்குறளும், நாலடியாரும்கூட இல்லை. பின், அந்த முதல் ஜோடி செய்த செயல்கள் எவ்வாறு கர்மவினை என்று கருதப்படும்? அவர்கள் செய்த அனைத்து காரியங்களும் குற்றப்பத்திரிகை சுமத்துபவைகளாக இருக்கவே முடியாது.

அந்த, முதல் இருவருக்கும் இது நல்லது இது கெட்டது என்பதை யார் விளக்கியது? யார் வகுத்தது? இவற்றை எல்லாம் யார் உணரமுடியும்? எப்படித்தான் உணருவது? யார்தான் விளக்கிவைப்பார்கள்? அப்படி விளக்கி வைக்கக்கூடிய ஒன்றே ஒன்று கடவுள்தான். அதுதான் இப்போது இவ்வுலகில் தென்படவில்லையே? இதை யாரிடம் சென்று முறையிட? இதையும் நாம் கடவுள் என்ற அந்த பேராற்றல் வாய்ந்த சக்தியிடம்தாம் முறையிடவேண்டியிருக்கிறது. இன்றைய உலகில் நடக்கும் சம்பவங்கள் பல மனித பண்பாட்டினை பறைசாற்றும் செயல்கள் அல்லவே. ஒரு புறம் ஆயிரமாயிரம் மனிதர்களும் மற்றும் விலங்குகளும் உணவின்றி தினமும் மடிகின்றனர். அதே நேரத்தில் சிலர் ஒவ்வொரு நாளும் கோடிகணக்கில் பணம்சேர்க்கிறார்கள். ஒருபுறம் கொலை, கொள்ளை, அநீதி, லஞ்சம் மற்றும் அராஜகம். இன்னொரு புறம் இன்பம்,கேளிக்கை, உல்லாசம் மற்றும் சல்லாபம். ஒரு புறம் பெண்களிடத்தில் வன்முறை மற்றும் அதர்மமான காரியங்கள் இன்னொரு புறம் பெண்களே செய்யும் வன்முறைகள், ஆபாசம் மற்றும் வேறு பலவழிகளில் செய்யும் இழிவான காரியங்கள். பசியின் கொடுமை காரணமாகவும் மற்றும் தம் குடும்பத்தை காப்பதற்காகவும், பெண்கள் சிலர் தமது கற்பையே வியாபாரம் செய்கிறார்கள். இந்த காரியத்தை குற்றம் என்று ஆணித்தரமாக கூற இயலுமா? பணத்தை பொருளை திருடுவது சட்டத்திற்கு புறம்பான காரியங்கள் எனும்போது, ஒரு மனிதரிடம் தன்னையே ஒரு இரவு சமர்ப்பணம் செய்வதை அநாகரீகம், அதர்மம் முறையற்ற சமுதாயத்தில் கேடுவிளைக்கும் செயல் என்று புகாரும் குற்றமும் சுமத்துவது, உண்மையிலேயே சரியா? சந்திப்புகள் எனும் போர்வையின் மறைவில் தான் எத்தனை வகையான மாடல்கள், ஆடல்கள், தேடல்கள், கூடல்கள் மற்றும் ஊடல்கள்! வேதங்கள் கடவுளே மானுடத்திற்கு வழங்கியது என்கிற ஒரு கருத்தும் நம்பிக்கையும் நம்மில் பலரிடம் இருக்கிறது. வேதம் கடவுளால் எழுதப்பட்டது என்றால், அது உலகம் முழுவதும் ஏன், வியாபித்திருக்கவில்லை? இந்திய மண்ணில் மட்டும்தான் வேதம் நடைமுறையில் இருந்ததா? தவிர இப்போதுள்ள காலகட்டத்தில் மக்களை நான்குவகை (வர்ணாஸ்ரம்) தொழில்களின் கீழ் பகுத்து வகுக்கமுடியுமா? ஒருவருக்கு, எப்படி வாழவேண்டும் என்ற விருப்பம் இருக்கிறதோ அப்படி வாழ இந்த உலகம் மறுப்பு தெரிவிக்கவில்லையே. அப்படி ஒருவர் தனக்கு பிடித்த தொழிலை செய்து தான் நினைப்பது போல சுதந்திரமாக வாழ்வதை நாம் குறை அல்லது தவறு என்று தட்டி கேட்கமுடியுமா? மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காத பேச்சும் நடையும் ஒருவரிடம் இருப்பின், அத்தகைய நபர்கள் எந்தவிதமான தொழிலில் ஈடுபட்டாலும் அவர்களை எந்த வகையில் குறை கூற முடியும்?

ஒருவரையோ, ஒரு சமுதாயத்தினரையோ ஒரு மதத்தினரையோ, ஒரு இனத்தையோ, அவர் மனம் புண்படும் விதமாக, அவர்களின் உடலுக்கு இழுக்கையும், தீங்கையும் காயத்தையும் விளைவிப்பதாக இருக்குமானால் அதைத்தான் நான் இங்கு தீங்கு என்று குறிப்பிடுகிறேன்.

இயற்கையின் சீற்றங்கள், உடலை தாக்கும் பயங்கரமான வியாதிகள், பிறந்த உயிர்கள் இறந்தே தீரவேண்டும் போன்ற மறுக்கமுடியாத, தவிர்க்கமுடியாத அசம்பாவிதங்கள் தான், மனிதன் மனதில் பீதியையும் பயத்தையும் உருவாக்கிவிட்டு, அதனால் கடவுள் என்கிற ஒன்றை மனதளவில் மனிதன் கற்பனை செய்து, பின்னர் அதற்கு எண்ணற்ற உருவங்களை கொடுத்தான். ஒருவருடைய கர்மவினைகள் தான் அவரவர் வாழ்விற்கு காரணம் என்றால், பின்னர் கடவுளுடைய பங்கு என்ன? இயற்கையை நிர்வகிப்பதிலா? அல்லது அந்த இயற்கையைத்தான் கடவுள் என்று அழைக்கவேண்டுமா? இயற்கைதான் கடவுளின் பரிமளிப்பு, கடவுளின் உருவம் இயற்கைதான் எனும் கூற்றில் தவறு ஏதேனும் உண்டா?

நாம் எத்தனை முயற்சிகள் செய்து முன்னேற்றம் என்கிற பெயரில் இயற்கையோடு அவ்வப்போது சிறிது போட்டியிட்டாலும், அனைத்தையும் கடந்து இயற்கை நம்மை காட்டிலும் மிகவும் வலியது என்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியுமா? இந்த வகையில் இயற்கையை இறைவனின் முக்கிய தளபதி என்று ஏற்றுக்கொள்ளலாமா? ஒவ்வொருவரும் அவரவருக்கு தேவையான முறையில் வாழ விருப்பம்கொண்டு, அதன்மூலம் உருவாக்கப்பட்டதே சமூகம், சமூக நியதிகள், ஒழுங்குமுறைகள் எல்லாமே. இத்தகைய சமுதாயங்கள் தானே, அந்தந்த சமுதாயத்தின் தேவைக்கேற்ப இத்தகைய ஒழுங்கு மற்றும் வாழ்வு முறைகளை கொண்டு, இன்று உலகெங்கிலும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் தனித்தனியே அதனுடைய நடைமுறைகள், கோட்பாடுகள், அறநெறிகள், வாழும் முறைகள் என்று பல கோணங்களில் அடிப்படையில் செயல்பட்டுவருகிறது.

மதம் என்கிற தேவையற்ற மிகவும் கொடிய கண்டுபிடிப்பு தான் மனிதனின் முதல் பரம விரோதி. உலகில் மதம் என்ற ஒன்றே இல்லாமல் இருப்பின், இந்த உலகம் இப்போதயத்தை காட்டிலும் எவ்வளவு சிறப்புடன் இருந்திருக்கும் என்பதை நாமே யூகிக்கமுடியும். மதம், இனம், ஜாதி என்ற பெயரில் எவ்வளவு முரட்டுத்தனமான நம்பிக்கைகள், முட்டாள்தனமான கொள்கைகள், பிற உயிர்களை வதைக்கும் மனிதாபிமற்ற கொடுமையான செயல்கள் தொடர்ந்து நடந்த வண்ணம் இருக்கிறது. எவ்வளவு மக்கள் மதச்சண்டையில் உயிரை கொடுத்திருப்பார்கள், கொடுத்துக்கொண்டும் இருக்கிறார்கள். இன்றைய அளவில் ரஷியா-உக்ரைன், இஸ்ரேல்-பாலஸ்தீன் சண்டைகள் இத்தகைய வித்தியாசங்கள் மற்றும் பேதங்களினால் நிகழ்பவைகள்தானே? இத்தகைய போர்கள் நடைபெற, நேரடியாகவோ மறைமுகமாகவோ, விஞ்ஞானமும் அதன் பல கண்டுபிடிப்புகள் மூலம் உதவுகிறது என்ற குற்றச்சாட்டையும் நாம் மறுக்கமுடியாது.

கடவுளின் அவதாரங்கள் என்று சொல்லப்படும் சில மனிதர்கள், மதம் என்ற, மனிதனிடமிருந்து மனிதனை பிரித்து வைக்கும் விபரீதமான, மனித ஒற்றுமையை குலைக்கும் அமைப்புகளை தோற்றுவித்தனர் என்றால் அது மிகையாகாது. மதத்தின் தலைவலிகள் யாவை என்றால், ஜாதி, குலம், இனம் போன்ற கேடுகெட்ட பிரிவினைகள்தான். மதம் என்று ஒன்று இல்லாமல் இருந்திருந்தால், 'சம்மதம்' என்கிற ஒரே ஒரு உலக மதம், யாதும் ஊரே யாவரும் கேளிர், அன்பே எங்கள் உலக தத்துவம்" என்ற அற்புதமான உலக நீதியின் வழியில், சுகமான பயணம் செய்துகொண்டிருக்கும்.

இறுதியாக, இந்த பிரபஞ்சம், உலகம் உருவாக, முதல் ஜோடி மனிதர்கள் இவ்வுலகில் பிறக்க காரணம், முழுமுதற்கடவுள், தெய்வீக சக்தி, இயற்கை என்று பல வகையிலும் அழைக்கப்படும் அந்த எண்ணிப்பார்க்கமுடியாத, உணரமுடியாத, அறியமுடியாத, காணமுடியாத ஒரு மாபெரும் அபூர்வ பிரபஞ்ச சக்திதான். இந்த பிரபஞ்சமும் உலகும் இயங்க, நாம் இவ்வுலகில் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் (நல்லவை கெட்டவை) மூலகாரணமான அந்த சக்திதான் தார்மீக பொறுப்பை ஏற்கவேண்டும்.

கர்மவினைகள் காரணமாகத்தான் மனிதர்களும் மற்றும் வேறு உயிர்களும் இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறந்து, அவதிப்பட்டு, அனுபவித்துக்கொண்டும் அல்லல் பட்டுக்கொண்டும் இருக்கின்றன எனும் பொதுவான கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா? இதற்கு தக்க ஒரு பதிலினை நீங்கள்தான் நன்கு யோசனை செய்துவிட்டு, உங்களுக்கு நீங்களே தரவேண்டும்.

# குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையான பிள்ளையான்



கொழும்பு, நவ. 22

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் செனல் 4 தொலைக்காட்சி தயாரித்த விசேட காணொளி தொகுப்பு தொடர்பான விசாரணைக்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இரண்டாவது நாளாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் தொடர் விசாரணையின் அடிப்படையில் இன் றைய தினமும் (22.11.2024) அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

சிவனேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளரான அசாத் மௌலானா என்பவர் செனல் 4 தொலைக்காட்சிக்கு வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அதில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனுக்கும், ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல் தாரிகளுக்கும் தொடர்பு இருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் அவர் வெளிப்படுத்திய இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இரண்டாவது நாளாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார் (ஐ)

# தலைமுடி அலங்கார பொருட்கள் விற்பனை தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 22

இலங்கையில் போலியான தலைமுடி கலரிங் பொருட்கள் விற்பனை செய்யப் படுவது தொடர்பில் பொது மக்களுக்கு, நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தகைய தயாரிப்புகள் பற்றிய தகவல்கள் இருந்தால், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தொலைபேசி இலக்கமான 1977 க்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நன்கு அறியப்பட்ட வர்த்தக நாமத்தைப் பயன்படுத்தி போலியான முடியை நிறமாக்கும் கிரீம்களை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர்விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

காட்டையில் உள்ள பழைய மாநகர சபை கட்டிடம் மற்றும் பீப்பிள்ஸ் பார்க் ஆகிய இடங்களில் போலியான கிரீம்கள் விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இவை தவறான முறையில் உரு வாக்கப்பட்டதாகவும், சரியான பொதியிடல் எடை 21 கிராம் எனவும் இந்த போலிப் பொருளின் எடை 10 கிராம் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று வர்த்தகர்களும் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்து அழிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)







# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் ஆசனம் யாருக்கு! ஹர்ஷ வெளியிட்ட தகவல்



கொழும்பு, நவ. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன மற்றும் ஹிருணிக்கா பிரேமசந்திர ஆகியோருக்கு தேசிய பட்டியல் ஆசனங்களை வழங்க கலந்தோலோசித்து வருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எரான் விக்ரமரத்ன மற்றும் ஹிருணிக்கா பிரேமசந்திர ஆகியோர் கட்சிக்காக கடுமையாக உழைத்துள்ளதாகவும் ஹர்ஷ இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கட்சியின் தேசிய பட்டியல் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு வாழ் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தேசிய பட்டியல் ஆசனமொன்றை வழங்குமாறு பலரும் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







# கிளிநொச்சியில் மரபுசார் உணவு திருவிழா!

கொழும்பு, நவ. 22

கிளிநொச்சியில் மரபுசார் உணவு திருவிழா இன்று காலை 10.00மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வானது கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் "மரபுசார் உணவு: மருந்தாகும் விருந்து" எனும் தொனிப்பொருளில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய உணவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு பாரம்பரிய




உணவுகளை உள்ளடக்கிய கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை தயாரிக்கும் முறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தயாளினி, கிளிநொச்சி மாவட்ட சித்த ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் அ.அரவிந்தன், கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



## லொஹான் ரத்வத்தேவின் மனைவிக்கு விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, நவ. 22

சட்டவிரோதமான முறையில் கார் ஒன்றை பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தே எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுகேகொட நீதவான் நீதிமன்றில் இன்று (22) முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மிரிஹான, எம்புல்தெனிய பிரதேசத்தில் உள்ள மூன்று மாடி வீடொன்றில் இலக்கத்தகடு இல லாத சொகுசு கார் தொடர்பில் பொலிஸ் தலைமைய கத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குறித்த சொகுசு காரை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

விசாரணையின் போது, ரத்வத்த மற்றும் அவரது மனைவி இருவரும், குறித்த வீட்டில் தனது மாமியார் வசிப்பதாக பொலிஸாரிடம் விளக்கமளித்துள்ளனர்.

இந் நிலையில், அண்மையில் கண்டி, கட்டுகஸ்தோட்டை பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளரினால் பல வாரங்களுக்கு முன்னர் இந்த கார் அங்கு கொண்டு வரப்பட்டதாக அவர்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனுக்கு தமிழரசுக் கட்சியின் முக்கிய பதவி



கொழும்பு, நவ. 22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் நியமிக்கப பட்டுள்ளார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்று நாடாளுமன்ற நூலகக் கட்டடத்தில் கூடியது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் கட்சியின் ஊடகப் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசனை சிவஞானம் சிறீதரன் முன்மொழிந்திருந்தமையுடன், சண்முகம் குகதாசன் வழிமொழிந்திருந்தார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையிடும் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனை இளையதம்பி சிறிநாத் முன்மொழிய, அதனை ஞானமுத்து ஸ்ரீநேசன் வழிமொழிந்திருந்தார்.

இந்தக் கூட்டத்தின்போது, தமிழரசுக் கட்சியாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவது என்றும், அதற்கான வரைவுகளை முறையாகத் தயாரித்து திட்டமிட்டதும், ஆக்கபூர்வமானதுமான சந்திப்பை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# அரசாங்கம் மீது அருட்தந்தை சத்திவேல் குற்றச்சாட்டு



தற்போதைய அரசாங்கம் சிங்கள பௌத்த தேசத்தின் ஒற்றை ஆட்சிக்கான திசை காட்டியே தவிர தமிழர் தேசத்திற்கான திசை காட்டி அல்ல. என மூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், அதன் தேசியம், சுயநிர்ணய உரிமை,சமஸ்டி தீர்வு எனும்தமிழர் அரசியல் மையக்கருத்தியலை 2009ம் ஆண்டுக்குப் பின்னரும் சயனைட் குப்பி போல் நெஞ்சில் ஃமனதில் சுமந்த அரசியல் வாழ்வை தமதாக்கிக் கொண்டோருக்கு தேர்தல் முடிவுகள் முள்ளிவாய்க்கால் வலியை கொடுத்துள்ளது.

போர்க்காலத்தில் பல்வேறு விதமான காட்டிக் கொடுப்புகளினால் அடைந்த தோல்விகள், பின்னடைவுகள், வீழ்ச்சிகள் என்பவற்றை சந்தித்தபோதும் மாவீரர் வாரமும் தமிழ் தேசிய நாளும் புத்தெழுச்சியை தந்தன. சவால்களை வென்று பயணிக்கும் திசை காட்டின என்பதிலே நம்பிக்கைவைத்து இவ்வருட மாவீரர்வாரத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

அதுவே எம் தேச எழுச்சியை மீள நிலை நிறுத்தும் ஏற்றும் சுடர் உள்ளங்களை புதுப்பிக்கும். தற்போது வெற்றிக் களிப்பில் இருக்கும் திசைகாட்டி சிங்கள பௌத்த தேசத்தின் ஒற்றை ஆட்சிக்கான திசை காட்டியே தவிர தமிழர் தேசத்திற்கான திசை காட்டி அல்ல. தற்போதைய ஜனாதிபதியும் அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வேட மக்கள்விடுதலை முன்னணியினரும்நடைபெற்று முடிந்த இரு தேர்தல் பிரசார காலங்களிலும் தமிழர்களின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் தமது உறுதியான நிலைப்பாட்டை அறிவித்து விட்டனர்

எமக்கான தீர்வு இவர்கள் காலத்தில் கிட்டப்போவதில்லை. நல்லாட்சி காலத்தில் நாடாளுமன்ற கட்சிகளின் பங்களிப்போடு (தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்போடும்) தயாரிக்கப்பட்ட ஒற்றை ஆட்சியையும் பௌத்த முன்னுரிமை கொண்ட அரசியல் யாப்பு முன்மொழிவினை மக்கள் கருத்தறிவு தேர்வு மூலம் நடைமுறையாக்குவதே இவர்களின் நோக்கம்.

இவ் வரைவு தமிழர்களின் அரசியல் தீர்வு அபிலாசைகளை மூழ்கடித்துவிடும். இதுவும் இன்னுமொரு முள்ளிவாய்க்காலாக அமைந்துவிடும்.

இதனை கலந்துரையாட நாடாளுமன்றத்தில் முன்வைக்கும்போதுதற்போது3ஃ2பெரும்பான்மை கொண்டுள்ள சிங்கள தேசத்தின் திசை காட்டி வடக்கு கிழக்கு இணைய விடாத வகையிலும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாத வகையிலும் அரசியல் சட்டமாக்குவதற்கான சாத்தியக்கூறுகளே தற்போது தென்படுகின்றன.

இதற்கு தமிழ் தேசமாக ஜனநாயக ரீதியில் எம் நிலைப்பாட்டை வெளிப்படுத்த திரட்சி கொள்ளல் வேண்டும்.

இந்நிலையில் தமிழர் தேசியம், சுயநிர்ணய உரிமை,சமஸ்டி தீர்வு தொடர்பில் கருத்துக்களை முன்வைத்து வாக்கு கேட்டவர்களும் அதற்கு வாக்களித்தவர்களும், தேசிய தலைவருக்கு சிலை வைப்போம் என்றவர்களும் கடந்த கால போலி வேசங்களை களைந்து தமிழருக்கு எதிரான அரசியல் துரோக செயல்களை கைவிட்டு தெற்கின் அரசியல் அரசியலுக்கு விலை போகாது தமிழர் அரசியல் சார்பு எடுக்க வேண்டும்.

அதற்கான மன மருந்துக் காலமும் மனம் திருந்தும் காலமே தற்போதைய மாவீரர் வாரம். அதேபோன்று எமது சமூகத்தின் இன்னும் ஒரு பிரிவினர் அரசியல் வழி தவறி தமிழர் தேசத்தின் எழுச்சி நாட்களை எல்லாம் (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபன் தியாக தினம், மாவீரர் வாரம்) வருடம் ஒரு தடவை வரும் தீபாவளி, பொங்கல், திருக்கார்த்திகை நாட்களாக்கினர்.

அதற்கு அப்பால் ஆன அரசியல் பயணத்தை தவிர்த்துக் கொண்டவர்களும் உண்டு. வேறு பலர் திருவிழா கால வியாபாரிகள் போல உழைத்தவர்கள் உண்டு. இதுவும் அரசியல் துரோகமே. இவர்களும் மாவீரர் காட்டிய மற்றும் பயணித்த திசை நோக்க வேண்டும்" என்றுள்ளது.

(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2024 இல் வெளியிடப்பெற்றது.